Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

39

# சிற்பக் கை அமைதிகள்

முனைவர் ச.தனலெட்சுமி
உதவிப் பேராசிரியர், முதுகலை மற்றும் தமிழாய்வுத் துறை
தி ஸ்டாண்டர்டு ஃபயர் ஒர்க்ஸ் இராஜரத்தினம் மகளிர் கல்லூரி
சிவகாசி

**ஆய்வுச் சுருக்கம் (Abstract)**

தமிழ்நாட்டில் சிற்பகக்கலை தொன்றுதொட்டுச் சிறந்த நிலை வகித்து வந்துள்ளது. சிற்பக் கை அமைதிகள், முத்திரைகள் என்றும் அழைக்கப்படும் 32 கை முத்திரைகளை மூன்று வகையாகப் பகுக்கலாம். இவ்வாய்வில் முத்திரைகள் குறித்து ஆராய்வோம்.

**ஆய்வின் நோக்கம் (Aim)**

சிற்பக் கை அமைதிகளில் பல உள்ளன. அவற்றைக் குறித்த கருத்துக்களை ஆய்வதே இவ்வாய்வின் நோக்கம் ஆகும்.

**திறவுச்சொற்கள் (Key words)**

சிற்பம், முத்திரை, ஹஸ்தம், ஸ்தபதி

**தலைப்பு அறிமுகம் (Topic Introduction)**

சிற்பங்களில் உள்ள கை அமைதிகள் பற்றி இவ் ஆய்வின் வழிக் காண்போம். சுpற்பம் என்பதன் பொருள் விளக்கம், சிற்பங்களின் வகைகள், சிற்பக் கை அமைதிகளின் வகைகளையும், விளக்கங்களையும் பற்றி விளக்கமாகக் காண்போம்.

**முன்னுரை**

கோயிற் கலைகளில் மிகவும் முக்கியமான ஒன்று சிற்பக்கலை.சிற்பக்கலையில் நுட்பமான கருத்துக்கயை பெற முடியும். சிற்பங்களில் பல்வேறு வகைகள் உள்ளன. சிற்பங்களில் இடம் பெறும் கை அமைதிகள் மூலம் அறியக்கூடிய செய்திகளை ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது

**சிற்பம்**

“சில்” என்னும் வேர்ச் சொல்லடியாகச் சிலை என்பது பிறந்தது. கல் என்னும் பொருளைக் கொண்ட ‘சிலை’ என்பதன் தொடர்பாகச் சிற்பம் எனும் சொல் உருவாயிற்று. இதன் பரிணாம வளர்ச்சியில், அழகுக் கலைகளுள் ஒள்றாகச் ‘சிற்பம்’ போற்றப்பட்டுச் சிற்பக் கலை மக்களிடையே பெரு வழக்கில் வந்துள்ளது[1]. சிற்பங்களை உருவாக்குபவர் சிற்பி என்றும் ஸ்தபதி என்றும் அழைக்கப்படுகிறார்.

**சிற்பக்கலை**

சிற்பக்கலை என்பது, “மண், மரம், செங்கல், கல், உலோகம், தந்தம், மெழுகு, அரக்கு முதலியவற்றைக் கொண்டு உருவங்களை அமைக்கும் கலை” ஆகும்.

“வழுவறு மரனும் மண்ணுங் கல்லுங்



Tamil University Thanjavur
Department of Music
International Conference
"SIGNIFICANCE OF MUSIC,DANCE AND CULTURE THROUGH HISTORY"
"வரலாற்றுச் சுவடில் இசை, நடனம் மற்றும் கலாச்சாரத்தின் முக்கியத்துவம்"
Pranav Journal of Fine arts
பிரணவ் நுண்கலை ஆய்விதழ்
volume:1 Issue:4 March 2023
ISSN:2582-9513

எழுதிய பாவை…
மண்ணினும் கல்லினும் மரத்தினும் கவரினு
கண்ணிய தெய்வதம் காட்டுநர் வகுக்க"

என வரும் மணிமேகலை அடிகள் கவனிக்கத்தக்கவை.[2] என்று மா.இராசமாணிக்கனார் சுட்டுகிறார்.

**சிற்பங்களின் வகைகள்**

சிற்பங்களை நான்கு வகையாகப் பகுக்கலாம் என்று அறிவுடைநம்பி, தம் நூலில் பதிவு செய்துள்ளார்[3].

**சிற்பங்கள்**

1. கற்சிற்பங்கள்
   கருங்கல் சிற்பங்கள்
   சலவைக்கல் சிற்பங்கள்

2. மரச்சிற்பங்கள்
   தூண் சிற்பங்கள்
   தேர்ச்சிற்பங்கள்
3. கதைச்சிற்பங்கள்
4. செப்புப் படிமங்;கள

சிற்பம் அமைப்பின் அடிப்படையில் தனிச் சிற்பம், புடைப்புச்சிற்பம் என்று இரு வகைகளாகப் பகுக்கப்படுகிறது.

**சிற்பக்கை அமைதிகள்**

சிற்பங்களில் கை விரல்களை நீட்டுதல், மடக்குதல், கூட்டுதல், குவித்தல் ஆகிய ஐந்து நிலைகளை அடிப்படையாகக் கொண்டு தன் எண்ணத்தை வெளிப்படுத்தும் அமைப்பு கை இலக்கணம் கை அமைதி எனப்படும்.

நாட்டியக் கலைகளில் அபிநய பேதங்களை இவ்வமைப்பு வெளிப்படுத்துவதால் இதை முத்திரை(பிடி) என்றும் கூறுவர். பொதுவாக கஸ்த முத்திரை என்று அழைப்பர்.

சிற்பக் கை அமைதிகள் மொத்தமாக 32 வகைகள் இருக்கின்றன. அவற்றில் 24 முத்திரைகள் தொழிற்கை முத்திரைகள் ஆகும். மீதம் எழிற்கை முத்திரைகள் என நான்கும், இரட்டைக் கை முத்திரைகள் நான்கும் உள்ளன.

**தொழிற்கை முத்திரைகள் (24) அல்லது (ஒற்றைக்கை தொழிற் முத்திரை)**

1. அபய ஹஸ்தம்
2. வரத ஹஸ்தம்
3. கடக ஹஸ்தம்
4. சிம்மகர்ண ஹஸ்தம்
5. வியாக்யான ஹஸ்தம்

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

6. சூசி ஹஸ்தம்
7. தர்ஜன் ஹஸ்தம்
8. கர்த்தரீமுக ஹஸ்தம்
9. அலபத்ம ஹஸ்தம்
10. விஸ்மய ஹஸ்தம்
11. பல்லவ ஹஸ்தம்
12. நித்ரா ஹஸ்தம்
13. அர்த்த சந்திர ஹஸ்தம்
14. அர்த்த பாதக ஹஸ்தம்
15. திரிசூல ஹஸ்தம்
16. முஷ்டி ஹஸ்தம்
17. சுpகர ஹஸ்தம்
18. பூஸ்பரிச ஹஸ்தம்
19. கடி ஹஸ்தம்
20. ஊரு ஹஸ்தம்
21. ஆலிங்க ஹஸ்தம்
22. தனுர் ஹஸ்தம்
23. டமரு ஹஸ்தம்
24. தாடன ஹஸ்தம்

**இரட்டைக் கை முத்திரை (4)**

1. அஞ்சலி ஹஸ்தம்
2. தியான ஹஸ்தம்
3. புஷ்ப பட ஹஸ்தம்
4. தர்மசக்கர ஹஸ்தம்

**எழிற்கைகள் (4)**

1. கஜ ஹஸ்தம்
2. தண்ட ஹஸ்தம்
3. டோல ஹஸ்தம்
4. பிரசாரித ஹஸ்தம்

**முடிவுரை (Conculsion)**

ஒரு சில முத்திரைகள் கடவுற்படிமங்களில் அவசியம் காணப்படும் வியாக்கியமான ஹஸ்தம் என்று சொல்லப்படும் சின் முத்திரை அவசியம் தட்சிணாமூர்த்தி படிமங்களில் இருக்கும். சூசி முத்திரை அதிகளவில் காணப்படும் என்றாலும் துவாரபாலகர் கஜசம்ஹார மூர்த்தி படிமங்களில் பெரும்பாலும் இருக்கும். இந்த முத்திரையை இந்த சிற்பங்களில் இந்த அமைப்பு தான் இருக்க வேண்டும் என்ற விதி

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

ஏதும் இல்லை. முத்திரைகளின் அமைப்பை சற்று மாற்றியும் படிமங்களில் உண்டு. இந்த 32 முத்திரைகளில் அடங்காத சில கை அசைவுகளும் உண்டு.

**மேற்கோள்கள் (Reference)**

1. செ.வைத்தியலிங்கம் சிற்பக்கலை ப – 17
2. மா.இராசமாணிக்கனார் தமிழகக் கலைகளும் கல்வெட்டுக்களும் ப-24
3. ம.சா.அறிவுடை நம்பி தஞ்சை மராட்டிய மன்னர்கள் வளர்த்த நுண்கலைகள் ப -167

**துணைநூற்பட்டியல் (Bibliography)**

1. ம.சா.அறிவுடை நம்பி - தஞ்சை மராட்டிய மன்னர்கள் வளர்த்த நுண்கலைகள்
கருமணி பதிப்பகம்
முதற் பதிப்பு 2006
புதுச்சோி

2. மா.இராசமாணிக்கனார் - தமிழகக் கலைகளும் கல்வெட்டுக்களும்
பாவை பப்ளிகேஷன்ஸ்
இரண்டாம் பதிப்பு -2020
சென்னை

3. செ.வைத்தியலிங்கம் - சிற்பக்கலை 2008
மெய்யப்பன் பதிப்பகம்
சிதம்பரம்